**திருவாரூர் நகராட்சி**

**விளம்பி ஆண்டு மார்கழி 26 , ஜனவரி 10–01–2019 ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை.திருமதி.க. உமாமகேஸ்வரி, M.Sc.,M.Phil, ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

**1.** திருவாரூர் நகராட்சியில் தார்சாலைகள் 62.395 கி.மீ சிமெண்ட் தளம் 10.215 கி.மீ மற்றும் மண் சாலைகள் 8.275 கி.மீ ஆக மொத்தம் 80.88 கி.மீ சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்நகராட்சி பகுதியில் கஜாபுயல் இயற்கை சீற்றத்தினால் ஏற்பட்ட பள்ளங்களால் சாலைகள் மிகவும் பழுதடைந்தும் போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளது. மேலும் பொது மக்களிடமிருந்து சாலையை செப்பனிட்டு தருமாறு புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு ஆணையம் 2018-19 ஆம் ஆண்டின் கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.1000.00 லட்சம் மதிப்பீட்டில் திட்ட கருத்துரு தயார்செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் பழுதடைந்துள்ள சாலைகள் தேர்வு செய்து உரிய மதிப்பீட்டில் திட்ட கருத்துகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.252/2019/இ1

**2.** இந்நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.4, பிளாக் 11 நகரளவு எண்கள்.640/3, 641/12, 642/5Apt, 643/1,2, 4, 6, 7, 8, 645-12, 13, 14 –ல் 117254.00 ச.அடி அடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைபிரிவினை வரன்முறைப்படுத்துதல் அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017 ன்படி குடியிருப்பு மனைபிரிவுக்கு ந.க.எண்.3480/2018/த.ம.3 நாள்.12.11.2018 நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் அளித்து வரைபட உத்தரவு வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை விஸ்தீரனம் 26645 சதுர அடி மற்றும் பூங்கா 1 (2588 சதுர அடி) பூங்கா 2 (2838 சதுர அடி) பூங்கா 3 (1573 சதுர அடி) பூங்கா 4 (1150 சதுர அடி) ஆகியவைகளை நகராட்சிக்கு பெயருக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவில் அமையபெற்றுள்ள பூங்கா மற்றும் சாலை நகராட்சிக்கு பெயருக்கு தான பத்திரம் பதிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.4373/2018/எப்1

**3.** இந்நகராட்சி பகுதிகளில் வார்டு எண்.3, பிளாக் 10 நகரளவு எண்கள்.14/6Pt, 7Pt, 15, 21, 23-28, 29/1, 2pt, 3, 30-34, 37, 39, 113, 126, 131, 132, 153-155, 157, 159, 161-1, 3, 5, 162, 163, 166-168, 170-174, 177, 178, 180PT, 182-ல் 1165230.00 அமையும் ச.அடி அடி பரப்பளவு கொண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைபிரிவினை வரன்முறைப்படுத்துதல் அரசாணை எண்.78 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017 ன்படி குடியிருப்பு மனைபிரிவுக்கு ந.க.எண்.2140/2018/த.ம.3 நாள்.20.09.2018 நகர்ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களால் கொள்கையளவில் ஒப்புதல் அளித்து வரைபட உத்தரவு வரப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவில் வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை மற்றும் பூங்கா ஆகியவைகளை நகராட்சிக்கு பெயருக்கு தானபத்திரம் மூலம் பதிவு செய்து அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அனுமதியற்ற குடியிருப்பு மனை பிரிவில் அமையபெற்றுள்ள பூங்கா மற்றும் சாலை நகராட்சிக்கு பெயருக்கு தான பத்திரம் பதிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.3744/2018/எப்1

**4.** திருவாரூர் நகராட்சி விஜயபுரம் வட்டம் தியாக பெருமாநல்லூர் கிராமத்தில் நகரளவு எண் வார்டு எண் 3, பிளாக் –ல் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 104 கிரில்(Grill) மற்றும் மைய திட்டத்திற்கும் (Center Median) விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் இனத்திற்கு கீழ்கண்டவாறு ஏல பொறுப்புத் தொகை நிர்ணயம் செய்ய மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | உரிம இனங்களின் விபரம் | உரிமம் கால அளவு | ஒப்பந்தப்புள்ளி/ ஏல பொறுப்புத் தொகை ரூ. | சொத்து மதிப்புச் சான்றிதழ் 1.1.2019 க்கு பிறகு பெற்றிருக்க வேண்டும் ரூ. | சொத்துமதிப்பு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 10 | தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 104 கிரில் (Grill) மற்றும் மைய (Center Median) திட்டத்திற்கும் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம் | ஒப்படைக்கும் நாள் முதல் 3 ஆண்டுகள் | 2,00,000/– | 4,00,000/– | 2,00,000/– |

அலுவலக குறிப்பு:
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.2506/2017/அ5

| | | |
|---|---|---|
| 5. | இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை அகற்றும் வாகன எண், TN,50- L. 2542 வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கும் வாகனத்தில் உள்ள பழுதுகள் நீக்கம் செய்திட வேண்டி ஆகும் செலவினத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விவரப்படி (3) ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது. | |

| வ.எண் | பணியாளர் பெயர் | ஒப்பந்த தொகை |
|---|---|---|
| 1 | அன்னை சத்யா இன்சினிஸ் ஒர்கஸ் 1334/59/ராமகே ரோடு திருவாரூர் | Rs.1,62,300/– |
| 2 | குரு ஆட்டோ கேரேஜ் ராஜிவ் நகர் தம்பி கோட்டை ரோடு, நாகை சாலை, தஞ்சாவூர். | Rs.1,69,500/– |
| 3 | சிவ சக்தி ஆட்டோ ஒர்க்ஸ் தனலெட்சுமி நகர், கும்பகோணம் | Rs.1,76,000/– |

அலுவலக குறிப்பு:

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாரூர் அன்னை சத்யா இஞ்சினிஸ் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

ஒம்/க.உமாமகேஸ்வரி
ஆணையர்/ தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

இடம் திருவாரூர்
நாள்.10.01.2019

**திருவாரூர் நகராட்சி.**

**விளம்பி ஆண்டு தை 09 , ஜனவரி 23–01–2019 ம் தேதி காலை 10.15 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை.திருமதி.க. உமாமகேஸ்வரி,** M.Sc.,M.Phil,

**ஆணையர் மற்றும் தனி அலுவலர்**

**1**

திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பழுதடைந்த நிலையில் உள்ள தார்சாலைகளை செப்பனிட ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் 2018–19ன் கீழ் ரூ.1000.00 இலட்சத்திற்கு திட்ட அறிக்கை தயார்செய்து நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மன்றத்தீர்மானம் எண்.161 நாள்.10.01.2019 மன்ற அனுமதி பெறப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு ஆணையம் 19.12.2018ல்ம் தேதிய கூட்ட ஆய்வறிக்கையில் திருவாரூர் நகராட்சிக்கு கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**மான்ய விபரம்**

மதிப்பீடு (ரூ. லட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2018–19 மான்ய நிதி | ரூ. 750.01 |
| 2 | நகராட்சி பங்களிப்பு | ரூ.249.99 |
| | ஆகமொத்தம் | ரூ.1000.00 |

**பணியின் விபரம்**

| வ.எண் | பணியின் பெயர் | வார்டு எண் | நீளம் (கி.மீ.) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | சிப்பம் 1 | | | | |
| | திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்டஅம்மாதோப்பு , பாலாஜி நகர் முதல் நல்லப்பா நகர், தென்றல் நகர் மெயின் ரோடு முதல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செல்லும் இணைப்பு சாலை, பொன்சுந்தரம் நகர், குறிஞ்சி நகர் மெயின்ரோடு, பணப்பகுதி நகர், கிடாரங்கொண்டான் நடுத்தெரு, வாசன் நகர், கட்டபொம்மன் நகர், வடக்கு கொத்தத்தெரு, அன்பு நகர், மலாயா கார்டன் நகர், பேராசிரியர் நகர், மதுரா நகர், எல்லையம்மன்கோவில்தெரு, மற்றும் பஜனமடத்தெரு முதலிய சாலைகளை தார்சாலையாக அமைக்கும் பணி | 1, 4, 5 , 6 , 8, 21 , 23, 24, 26 & 28 | 7.115 | 4 முதல் 6 முடிய | 486.30 |
| 2 | சிப்பம் 2 | | | | |
| | திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பனகல் சாலை, புகையிலைதோட்டம், அரிசிகடைத்தெரு, கே.டி.ஆர். எஸ்டேட், ஜவுளிகடை தெரு முதல் கமலாம்பாள் நகர் வரை, மேலவடம்போக்கித்தெரு, பெருமாள் மேலவீதி, மேலசீதன கட்டளை , மடப்புரம் பேட்டை, முத்திவிநாயகர்கோவில்தெரு, செங்கிமேட்டுதெரு, குரு நகர், அவ்வை நகர், நெய்விளக்கு தோப்பு தெரு முதல் ராணுவ நகர் இணைப்புச்சாலை மற்றும் ஆலடிமாரியம்மன்கோவில்தெரு சாலைகளை தார்சாலையாக அமைக்கும் பணி | 2, 3, 5 , 16, 17, 19, 20, 23, 28, 29, | 6.850 | 4 முதல் 6 முடிய | 480.00 |
| 3 | சிப்பம் 3 | | | | |
| | திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கேக்கரை தெற்கு மற்றும் வடக்குத்தெரு மற்றும் ஹவுசிங்யூனிட் குறுக்குச் சாலைகளை தார்சாலைகளாக அமைக்கும் பணி | 4, 9 | 0.480 | 4.00 | 33.70 |
| | கூடுதல் | | 14.445 | | 1000.00 |

மேற்கண்ட ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2018–19 ல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஒருக்கீடு செய்யப்படும் மான்யம் போக மீதத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.252/2019/இ1

**2**

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 1920 தமிழ்நாடு நகராட்சி பொதுவான விதி பிரிவு 15 ன் கீழ் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்ட விபரத்தினை நகர் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்தத்தாரரின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | 1 | அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர் பராமரிப்பு செய்யும் பணி (ந.க.எண்.4166/2018/அ5) | M/S. சாகுல் ஹமீது வெல்டிங் ஒர்க்ஸ் மற்றும் ஹோட்டல் எக்கியூப்மெண்ட்ஸ் | 144000/– |
| | 2 | 3.10.2018 அன்று திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மாண்புமிகு தமிழக ஆளுநர் வருகையினையொட்டி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் மற்றும் கழிப்பறைக்கு வர்ணம் அடிக்கும் பணி (ந.க.எண்.3722/2018/இ1) | திரு.எம்.அறிவானந்தம், ஒப்பந்ததாரர் | 130000/– |
| | 3 | 3.10.2018 அன்று திருவாரூா நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மாண்புமிகு தமிழக ஆளுநா் வருகையினையொட்டி நகராட்சி பழைய அலுவலக வளாகத்தின் முகப்பில் வர்ணம் அடிக்கும் பணி (ந.க.எண்.3722/2018/இ1) | திரு.எஸ்.தணிகாசலம் ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 162338/– |
| | 4 | 3.10.2018 அன்று திருவாரூா் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியிலுள்ள பிரதான சாலைகளில் தார்சாலை செப்பனிடும் பணி (ந.க.எண்.3722/2018/இ1) | திரு.எஸ்.ரெங்கசாமி ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 118719/– |
| | 5 | கஜாபுயல் 2018 முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக JCB வாடகைக்கு விநியோகம் செய்யும் பணி | திரு.எஸ்.ரெங்கசாமி ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 497581/– |
| | 6 | கஜாபுயல் 2018 – பவர்சா, பணியாளர்கள் மற்றும் எரிபொருட்கள் விநியோகம் செய்யும் பணி (ந.க.எண்.3301/2018/இ1) | திரு.எம்.தேன்மொழி ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 465265/– |
| | 7 | கஜாபுயல் 2018 –னை முன்னிட்டு நிவாரண முகாம்களில் பொது மக்களை தங்கவைப்பதற்கு ஏதுவாக ஜெனரேட்டர்கள் வாடகைக்கு அமைத்தல் பணி (ந.க.எண்.3301/2018/இ1) | திரு.எம்.தேன்மொழி ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 725899/– |
| | 8 | கஜாபுயல் 2018 னை முன்னிட்டு வாடகைக்கு டிப்பர்லாரி மற்றும் டிராக்டர் டிப்பர் விநியோகம் செய்யும் பணி (ந.க.எண்.3301/2018/இ1) | திரு.கே.செந்தில்குமாா் ஒப்பந்தக்காரா் திருவாரூா் | 398031/– |
| | 9 | கஜாபுயல் 2018 னை முன்னிட்டு வாடகைக்கு டிப்பர் லாரி, ஜேசிபி மற்றும் ஹிட்டாச்சி விநியோகம் செய்யும் பணி (ந.க.எண். 3301/2018/இ1) | திரு.என்.சரவணன் ஒப்பந்தக்காரா் கும்பகோணம் | 425714/– |
| | | அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிகள் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பிரிவு– 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதனையும் மற்றும் அதற்குண்டான பட்டியல் தொகையினை வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்கானும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அங்கிகரிக்கலாம். | | |
| 3 | குடியரசு தினவிழாவினையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் வருகைபுரியும் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலா்களுக்காக தற்காலிக கழிவறை அமைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.அதனை தொடா்ந்து தற்காலிக கழிவறைகள் அமைக்க இதர பணிகள் செய்திடவும் ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ,0.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிகள் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பிரிவு– 15 ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதனையும் மற்றும் அதற்குண்டான பட்டியல் தொகையினை வழங்கப்பட்டதனையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>மேற்கானும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதனை மன்றம் அங்கிகரிக்கலாம்.<br>ந.க.எண்.175/2018/இ1 | | | |

ஒம்/க.உமாமகேஸ்வரி
ஆணையர்/ தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

இடம் திருவாரூர்
நாள்.23.01.2019